பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
*14 04 2026                    6 30  PM*
மாநிலச் செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கல்வியறிவு பெறுவதன் மூலமே, உண்மையான சுதந்திரத்தை உறுதி செய்யமுடியும் என்று டாக்டர் அம்பேத்கர் வலியுறுத்தியதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.
2. சட்டப்பேரவைத் தேர்தலில் வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் சின்னங்களின் பதிவேற்றம் இம்மாதம் 16-ஆம் தேதிமுதல் மேற்கொள்ளப்பட உள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.
3. நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடரில் தொகுதி மறுவரையறை தொடர்பான அரசியல் சட்டத் திருத்தத்தை கொண்டுவர மத்திய அரசு முயற்சிப்பதாக திமுக தலைவர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.
4. பெண்களுக்கான இடஒதுக்கீட்டை முடக்க நினைக்கும் திமுக தொகுதி மறுவரையறை என்று கபட நாடகம் ஆடுவதாக பிஜேபி மூத்த தலைவர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.
5. தென்கொரியா சர்வதேச சேலஞ்ச் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Rithvik Bollipalli – Arjun Kadhe* இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>இனி விரிவான செய்திகள் –</u>

>>>>>><<<<<<

கல்வியறிவு பெறுவதன் மூலமே, உண்மையான சுதந்திரத்தை உறுதி செய்யமுடியும் என்று டாக்டர் அம்பேத்கர் வலியுறுத்தியதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று அண்ணல் பீமாராவ் அம்பேத்கர் நினைவு சொற்பொழிவாற்றிய அவர், அனைவருக்கும் சமஉரிமை, நல்லிணக்கம், அனைத்து குடிமக்களுக்கும் கலாச்சாரம் மற்றும் கல்வியில் சுதந்திரம் போன்றவற்றை அம்பேத்கர் வலியுறுத்தியதாக குறிப்பிட்டார்.

அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மன் ஆகிய நாடுகளுக்கு தன் சுயமுயற்சியால் சென்று உயர்கல்வி கற்ற டாக்டர் அம்பேத்கர், சட்டம், பொருளாதாரம், சமூகவியல், அரசியல் அறிவியல் போன்றவற்றில் தேர்ச்சி பெற்றவராக திகழ்ந்தார் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறினார்.

>>>>>><<<<<<

சட்டப்பேரவைத் தேர்தலில் வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் சின்னங்களின் பதிவேற்றம் இம்மாதம் 16-ஆம் தேதிமுதல் மேற்கொள்ளப்பட உள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், வேட்பாளரின் பெயர்கள் மற்றும் சின்னங்கள் பதிவேற்றம், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெறும் என்று கூறியுள்ளார்.

வாக்குச்சாவடி வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள்

உள்ளிட்ட தகவல்கள் அனைத்து வேட்பாளர்களுக்கும் பகிரப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

வேட்பாளர்களுக்கு தெரிவிக்கப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்கினை சரிபார்க்கும் இயந்திரங்கள் மட்டுமே வாக்குப்பதிவு நாளன்று ஒதுக்கீடு செய்யப்பட்ட வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்படும் என்றும் திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடரில் தொகுதி மறுவரையறை தொடர்பான அரசியல் சட்டத் திருத்தத்தை மத்திய அரசு கொண்டுவர முயற்சிப்பதாக திமுக தலைவர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தென் மாநிலங்கள் தொகுதி மறுவரையால் பாதிக்கப்படாது என்ற உறுதிமொழியை பிரதமர் நாடாளுமன்றத்தில் அளிக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

தொகுதி மறுவரையறை மாநில உரிமைகளை பறிக்கும் நடவடிக்கை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாநில உரிமைகளையும், சுய மரியாதையையும் பாதுகாக்க தமது கட்சி தொடர்ந்து போராடும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் அந்த பதிவில் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

பெண்களுக்கான இடஒதுக்கீட்டை முடக்க நினைக்கும் திமுக தொகுதி மறுவரையறை என்று கபட நாடகம் ஆடுவதாக பிஜேபி மூத்த தலைவர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், வரும் 16-ஆம் தேதிமுதல் நடைபெறவுள்ள நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடரில் பெண்களுக்கு 33 சதவீத இடங்கள் ஒதுக்கப்பட உள்ளதால், தொகுதிகளின் எண்ணிக்கையும் அதிகரிப்பதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் கூறியுள்ளார்.

தமிழகம் உள்ளிட்ட எந்தவொரு மாநிலமும் பாதிக்கப்படாத வகையில், தொகுதி மறுவரையறை செய்யப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடியும், உள்துறை அமைச்சர் திரு அமித் ஷாவும் உறுதியளித்துள்ளதை டாக்டர் எல். முருகன் சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>>><<<<<<

திருப்பரங்குன்றம் மலையில் நீதிமன்றம் உத்தரவிட்டும் திமுக அரசு தீபம் ஏற்ற அனுமதி அளிக்கவில்லை என்று பிஜேபி மூத்த தலைவர் திரு ஜெ பி நட்டா குற்றம் சாட்டியுள்ளார்.

திருவண்ணாமலையில் இன்று தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்ட அவர், தொன்மை சிறப்புமிக்க கலாச்சாரம் கொண்ட தமிழகத்தில் ஒரு குடும்பம் ஆட்சி செய்வதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தமிழகத்திற்கு மத்திய அரசு பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கியுள்ள போதிலும், அதனை திமுக அரசு முறையாக பயன்படுத்தவில்லை என்றும் திரு ஜெ பி நட்டா குற்றம் சாட்டினார்.

>>>>>><<<<<<

கடந்த தேர்தலின்போது அறிவித்த வாக்குறுதிகளை திமுக நிறைவேற்றியுள்ளதாக அக்கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் திருமதி கனிமொழி கூறியுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் தமது கட்சி வேட்பாளருக்கு வாக்கு சேகரித்த அவர், மாநிலத்தின் உரிமைகளை பாதுகாக்க தங்கள் கட்சி போராடி வருவதாக தெரிவித்தார்.

தமிழகத்திற்கான நிதியை மத்திய அரசு தரவில்லை என்றும், இயற்கை பேரிடர்களின் போது ஏற்பட்ட பாதிப்புகளுக்கு கூட போதிய நிதி விடுவிக்கப்படவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு காவல்துறை மூலம் வழக்கு பதிவு செய்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க தங்கள் கட்சி நடவடிக்கை எடுத்ததாகவும் திருமதி கனிமொழி கூறினார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் திமுக அரசு மக்களுக்கான பல நலத்திட்டங்களை நிறைவேற்றியுள்ளதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

தாம் போட்டியிடும் ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் வாக்கு சேகரித்த அவர், அக்கட்சியின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள திட்டங்களை நிறைவேற்றும் வகையில், அக்கூட்டணியில் போட்டியிடும் தமக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

>>>>>><<<<<<

*__இனி தேர்தல் களம்...__*

*(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)*

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது திருச்சி மாவட்டத்துக்கு உட்பட்ட 5 தொகுதிகள்.

*__(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 195 mins.)__*

>>>>>><<<<<<

*__மாவட்டச் செய்திகள்__*

அம்பேத்கர் பிறந்தநாளையொட்டி, காஞ்சிபுரத்தில் அவரது திருவுருவப்படத்திற்கு ஆட்சியர் திருமதி சினேகா மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

---------------

நாமக்கல்லில் மாவட்ட அளவிலான அனைத்து தொடர்பு அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி துர்காமூர்த்தி தலைமையில் காணொலி வாயிலாக நடைபெற்றது.

------------

தென்காசி மாவட்டத்தில் பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிப்பதை உறுதி செய்யும் வகையிலும், சட்டம் – ஒழுங்கை நிலை நாட்டவும் மாவட்ட காவல்துறை நடத்திய

கொடி அணிவகுப்பில் துணை ராணுவப்படையினர் துப்பாக்கி ஏந்தியபடி நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

*>>>>>><<<<<<*

தென்கொரியா சர்வதேச சேலஞ்ச் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Rithvik Bollipalli – Arjun Kadhe* இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, *6-2, 6-3* என்ற செட் கணக்கில், பிரான்சின் *Clement Chidekh* – ஜெர்மனியின் *Daniel Masur* இணையை வென்றது.

---------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி இரவு மணி *7.30*-க்கு தொடங்குகிறது.

*>>>>>>END<<<<<<*